ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2033/48 - 2017 අගෝස්තු මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.24
*2033/48 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

### வடக்கு மாகாண மாகாண சபை

வடக்கு மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 154 ஊ (1), (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்வரும் நியமனங்களைச் செய்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| கௌரவ நீதியரசர் கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் | வடக்கு மாகாணத்தின் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும் காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் அமைச்சராக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு. |
| கௌரவ திருமதி அனந்தி சசிதரன் | வடக்கு மாகாணத்தின் மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் ஆகியவற்றின் அமைச்சராக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு. |
| கௌரவ வைத்தியகலாநிதி ஞானசீலன் குணசீலன் | வடக்கு மாகாணத்தின் சுகாதாரமும் சுதேச மருத்துவமும் மற்றும் நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகளும் ஆகியவற்றின் அமைச்சராக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு. |
| கௌரவ கந்தையா சிவநேசன் | வடக்கு மாகாணத்தின் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் அமைச்சராக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு. |

ரெஜினோல்ட் குரே,
ஆளுநர்,
வட மாகாணம்.

*2017, ஓகத்து 23.*

*9- 138*

1A - PG 3666 — 57 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*